செய்தி வெளியீடு எண்.62/2018 நாள் 17.10.2018

**பொதுமக்களின் குடிநீர் தேவையை கருத்தில்கொண்டு சென்னைக் குடிநீர் வாரிய ஒப்பந்த லாரிகளை 24 மணி நேரமும் வாரத்தின் ஏழு நாட்களும் (24 x 7) இயக்க மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் உத்தரவு**

----

தனியார் லாரி உரிமையாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தால் பொதுமக்களுக்கு ஏற்படும் இன்னலைப் போக்க ஏற்கனவே மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள், தகவல்தொழில்நுட்ப நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் அடுக்குமாடி கட்டிடங்களுக்கு உடனடியாக தண்ணீர் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருந்தார்கள்.

அதன்படி சென்னைக் குடிநீர் வாரியம் பாதிப்புக்குள்ளான நுகர்வோர்கள் தங்களது சொந்த லாரிகள் அல்லது அவர்களால் அங்கீகாரம் பெற்ற லாரிகளுக்கு நீர் நிரப்பு நிலையங்களிலிருந்து இரவு முழுவதும் 10 மணி முதல் அதிகாலை 5 மணிவரை குடிநீர் வழங்கப்பட்டுவருகிறது..

சொந்த லாரிகள் இல்லாமல் இருப்பவர்கள் இந்த வசதியைப் பெற்று பயன் பெற முடியாமல் இருப்பதைக் கருத்தில் கொண்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக சென்னைக் குடிநீர் வாரிய ஒப்பந்த லாரிகளை 24 மணி நேரமும் வாரத்தின் 7 நாட்களும் (24X7) இயக்குவதற்கு உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்த உத்தரவை தொடர்ந்து சென்னைக் குடிநீர் வாரியம் அதிகாலை 5 மணி முதல் இரவு 10 மணிவரை பொதுமக்களுக்கு குடிநீர் தொட்டிகள் மூலமும் தெரு நடைகள் மூலமும் வழக்கம் போல் குடிநீர் வழங்கப்படும். இரவு 10 மணி முதல் அதிகாலை 5 மணி வரை லாரி வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்ட மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள், தகவல்தொழில்நுட்ப நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் அடுக்குமாடி கட்டடங்களுக்கு சென்னைக் குடிநீர் வாரிய ஒப்பந்த லாரிகள் மூலம் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வசதியை பெற பாதிக்கப்பட்டுள்ள நுகர்வோர்கள் முறையான விண்ணப்பத்தை அந்தந்த பகுதி அலுவலகங்களில் (Area Engineer Office) காலை 8 மணி முதல் இரவு 9 மணி வரை முன் பணம் **வங்கி வரைவோலையாகவோ அல்லது ரொக்கமாகவோ** செலுத்தி குடிநீர் பெற்றுக் கொள்ளலாம். இந்த நடைமுறை இயல்பு நிலை திரும்பும் வரை தொடரும் என மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலக்கத் துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

சென்னை பெருநகரில் உள்ள சென்னைக் குடிநீர் வாரிய 15 பகுதி அலுவலகங்களின் விலாசம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண். | பகுதி | முகவரி | தொலைபேசி எண். |
|---|---|---|---|
| 1 | I | 19, மார்கட் லேன்,<br>காலடிப்பேட்டை<br>சென்னை 600 019 | 25991908 |
| 2 | II | 162, நெடுஞ்செழியன் சாலை<br>மணலி,<br>சென்னை 600 068 | 25940719 |

| | | | |
|---|---|---|---|
| 3 | III | 1, பெருமாள் கோவில் தெரு<br>மாதவரம்,<br>சென்னை – 600 060 | 25530100 |
| 4 | IV | 10சி, 4வது பிரதான சாலை<br>எம்.கே.பி. நகர்,<br>சென்னை 600 039 | 26730647 |
| 5 | V | 1, எம்.சி.ரோடு,<br>வண்ணாரபேட்டை,<br>சென்னை 600 021 | 25904310 |
| 6 | VI | 3, வடிவேலு 2வது குறுக்கு தெரு, பெரம்பூர்<br>சென்னை 600 011 | 25517457 |
| 7 | VII | 1, டி.எஸ். கிருஷ்ணா நகர்,<br>முகப்பேர்<br>சென்னை 600 037 | 26562458 |
| 8 | VIII | 227, 2வது அவின்யூ<br>12வது பிராதான சாலை அருகில்<br>அண்ணா நகர்<br>சென்னை 600 040 | 26212101<br>26262156 |
| 9 | IX | 1, டாக்டர் ரங்கா ரோடு<br>அபிராமபுரம்<br>சென்னை 600 018 | 24996796 |
| 10 | X | 9, முத்துகிருஷ்ணன் சாலை, தியாகராயநகர்<br>சென்னை 600 017 | 28150059<br>28153803 |
| 11 | XI | 8 பி, கங்கையம்மன் கோவில் தெரு<br>ஆலப்பாக்கம்,<br>சென்னை 600 116 | 24867244 |
| 12 | XII | ஆலர்துார் OHT வளாகம்<br>புதுத் தெரு, ஆர்.டி.ஒ. அலுவலகம் எதிரில்,<br>ஆலந்துார்<br>சென்னை 600 016 | 22331608 |
| 13 | XIII | 42, முதல் பிரதான சாலை,<br>இந்திரா நகர்,<br>சென்னை 600 020 | 24451121 |
| 14 | XIV | 1, ராஜிவ் காந்தி சாலை<br>எல்.பி. சாலை பம்பிங் ஸ்டேசன் அருகில்,<br>கொட்டிவாக்கம்<br>சென்னை 600 041 | 24545873 |
| 15 | XV | கே.கே. சாலை, சோழிங்கநல்லுார்<br>சென்னை 600 119 | 24500262 |

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னை குடிநீர்